தடுத்தல் இணைப்பின் LIGHTHOUSE INITIATIVE வழங்குகிறது

# ஒன்ராறியோவின் தொழில்ரீதியான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புச் சட்டத் தொகுப்பு

— ஒரு தகவல் வழிகாட்டி —

“ உங்களுடைய உரிமைகள் எவை என்பது உங்களுக்குத் தெரியுமா? ”



## ››› தொழில்ரீதியான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு என்றால் என்ன?

ஒன்ராறியோவின் **தொழில்ரீதியான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புச் சட்டத் தொகுப்பு (OHSA)** பணியாளர்களுக்கு உரிமைகளை வழங்குகிறது. வேலைவழங்குநர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்களின் பங்கை இது நிர்ணயிக்கிறது அதனால் **பணியிடம் பாதுகாப்பானதாக மாற்றப்படலாம்.**

## ››› OHSA எவரைக் காப்பீடு செய்கிறது?

**கிட்டத்தட்ட,** ஒன்ராறியோவில் வேலைசெய்யும் **அனைவருமே** அவர்கள் தொழிற்சங்கத்தில் இருந்தாலென்ன இல்லையென்றாலென்ன OHSA ஆல் காப்பீடு செய்யப்படுகின்றனர்.

## ››› பணியாளரின் உரிமைகள்

- வேலை செய்யும்போது நீங்கள் வெளிக்காட்டப்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி **அறிந்திருப்பதற்கான உரிமை** உங்களுக்கு இருக்கிறது.
- ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக் கரிசனைகளை அடையாளம் காணும் மற்றும் தீர்க்கும் செயல்முறைகளில் **பங்குகொள்வதற்கான உரிமை** உங்களுக்கு இருக்கிறது.
- பாதுகாப்பில்லை என நீங்கள் நினைக்கும் வேலையைச் செய்ய **மறுப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது.**

இந்த உரிமைகளை நீங்கள் செயல்படுத்தும்போது அல்லது கோரும்போது உங்களை, **உங்களுடைய வேலைவழங்குநர் தண்டிப்பது** அல்லது தண்டிப்பதாக அச்சுறுத்துவது **சட்டத்துக்கு விரோதமானது.**

## ››› பணியாளரின் பொறுப்புகள்

பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வேலையிடத்தைப் பராமரிக்க உதவுவதற்காக உங்களுக்கும் கடமைகள் இருக்கின்றன. பின்வருவனவற்றைப் பணியாளர்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டும்:

- பணியிட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளையும் **சட்டத்தையும் பின்பற்றல்.**
- உங்களுடைய வேலைவழங்குநர் கோரும் பாதுகாப்பு உபகரணங்களை **அணிதல் மற்றும் பயன்படுத்தல்.**
- அவர்களை அல்லது வேறு எவரையாவது காயப்படுத்தாத விதத்தில் **வேலைசெய்தல் மற்றும் செயல்படல்.**
- உங்களுடைய மேற்பார்வையாளருக்கு அபாயங்கள் அல்லது காயங்களை **அறிவித்தல்.**



## ››› அறிந்திருக்கும் உரிமை

பின்வருவனவற்றைச் செய்வதற்கு வேண்டிய **பயிற்சியைப்** பெறுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது:

**01** **உங்களுடைய வேலையைப் பாதுகாப்பாகச் செய்தல்**

**02** **அவசரகால நிலை அல்லது காயம் ஒன்று ஏற்பட்டால் என்ன செய்யவேண்டுமெனத் தெரிந்திருத்தல்**

உங்களுடைய வேலையிடத்தில் இருக்கக்கூடிய பின்வருவன உள்ளடங்கலான பல வகையான ஆபத்துக்கள் பற்றிய **தகவல்களைப்** பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது:

**01** **இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்**

**02** **வேலை நிலைமைகள்**

**03** **வேலை செய்யும்போது வன்முறை மற்றும் தொந்தரவு**

காயப்படாமல் அல்லது வேலையுடன் தொடர்பான நோய்க்குட்படாமல் உங்களைப் பாதுகாப்பதற்காக உங்களுடைய வேலைவழங்குநர் **நியாயமான அனைத்தையும்** செய்யவேண்டுமென OHSA எதிர்பார்க்கிறது.



இவற்றுடன் உங்களுக்குப் போதுமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது மற்றும் உங்கள் வேலை பற்றி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை உங்களுடைய வேலைவழங்குநர் உறுதிப்படுத்த வேண்டிய ஒழுங்குமுறைகளும் OHSA இல் உள்ளன.

உதாரணத்துக்கு:

- அடிப்படையான **ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சியை** நீங்கள் பெற்றுக்கொள்வதை உங்களுடைய வேலைவழங்குநர் உறுதிப்படுத்த வேண்டும்.
- **அபாயகரமான இரசாயனப் பொருள்களுடன்** அல்லது ஏனைய ஆபத்தான பொருள்களுடன் நீங்கள் வேலைசெய்கிறீர்கள் எனில், அந்தப் பொருள்களை எப்படிப் பாதுகாப்பாகக் கையாள்வது மற்றும் அவற்றுக்கு வெளிக்காட்டப்பட்டால் ஆரோக்கியப் பாதிப்புகள் எவை என்பவை பற்றிய பயிற்சியைப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது.
- வேறு பல ஆபத்துக்கள் நீங்கள் வெளிக்காட்டப்பட்டால், அவைபற்றிய **பயிற்சியைப் பெறுவதற்கும் உங்களுக்கு உரிமை** இருக்கிறது.



## ››› பங்குகொள்வதற்கான உரிமை

உங்களுடைய பணியிடத்தைப் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றுவதற்கும் தொடர்ந்து அப்படியே வைத்திருப்பதற்கும் உதவுவதில் பங்குகொள்வதற்கும் அதில் ஈடுபடுவதற்குமான உரிமையை OHSA உங்களுக்கு வழங்குகிறது. வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பின்வருவனவை வேலையிடங்களில் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது:

**JHSC**

**ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் (JHSC)** அரைவாசிப் பகுதி பணியாளர்களால் ஆனது.

**20+** பணியாளர்கள்

**HSR**

பணியாளர்களில் ஒருவர் **ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதி (HSR)** ஆக இருக்க வேண்டும்.

**6–19** பணியாளர்கள்

- ஏதாவது ஒன்றைப் பற்றி உங்களுக்குத் திடமாகத் தெரியாவிட்டால் **கேள்வி கேளுங்கள்.**
- அவர்களுடைய மேற்பார்வையாளருக்கு **ஆபத்துக்களை அறிவிக்கும்** உரிமை மற்றும் கடமை அனைத்துப் பணியாளர்களுக்கும் இருக்கிறது.
- உங்களுடைய பணியிடத்தில் இருக்கும் சாத்தியமான ஆபத்துக்களைச் **சுட்டிக்காட்டுவதன்** மூலம் உங்களுடைய HSR அல்லது JHSC பணியாள அங்கத்தவருக்குச் நீங்கள் உதவி செய்யலாம்.
- ஒரு HSR அல்லது JHSC பணியாள அங்கத்தவராக நீங்கள் **தன்னார்வத் தொண்டு** செய்யலாம்.

## ››› உங்களுக்குத் தெரியுமா?

**ஏப்ரல் 28ம் திகதி,** வேலையில் கொல்லப்பட்ட அல்லது காயப்பட்ட பணியாளர்களுக்கான கனடாவின் உத்தியோகபூர்வமான **தேசிய துக்க தினம்** ஆகும். 1984ஆம் ஆண்டிலிருந்து கனடாத் தொழிற்சங்கங்களினால் இது அனுசரிக்கப்படுகிறது. 1991ஆம் ஆண்டில், கனடா அரசாங்கத்தினால் இது உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், அன்றிலிருந்து 100க்கும் அதிகமான நாடுகளுக்கு இது பரவியிருக்கிறது. கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பணியாளர்களுக்காக, கனடா மற்றும் உலகம் முழுவதும் உள்ள பல சமூகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் உள்ளூர் நினைவுச்சின்னங்களில் பூவளையங்களை வைப்பதற்காக பணியாளர்கள், அவர்களுடைய குடும்பத்தவர்கள் மற்றும் அவர்களுடைய தொழிற்சங்கங்கள் **ஏப்ரல் 28ம் திகதி** ஒன்றுசேர்கின்றனர்.

## ››› ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உங்களுடைய பணியிடத்தில் மேம்படுத்தல்

உங்களுடைய JHSC அல்லது HSRஐக் கண்டறியுங்கள். ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக் கரிசனைகள் பற்றி அவர்களுடனும் உங்களுடைய சக பணியாளர்களுடனும் கதையுங்கள். அந்தக் கரிசனைகள் பற்றி உங்களுடைய வேலைவழங்குநர் அக்கறை கொள்ளாவிட்டால், பாதுகாப்பில்லை என நீங்கள் கருதினால் வேலைசெய்வதற்கு மறுக்கும் உங்களுடைய உரிமையை நீங்கள் செயல்படுத்தலாம். தொழிலாளர் அமைச்சகத்தையும் **1-877-202-0008** என்ற இலக்கத்தில் நீங்கள் தொடர்புகொள்ளலாம் அல்லது மேலதிக தகவல்களை **www.labour.gov.on.ca** என்ற வலைத்தளத்தில் கண்டறியலாம்.

## ››› உங்களை வேலைவழங்குநர் தண்டிக்கிறாரா அல்லது அச்சுறுத்துகிறாரா?

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கரிசனைகள் நீங்கள் எழுப்புவதற்காகவோ அல்லது உங்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு உரிமைகளைச் செயல்படுத்துவதற்காக உங்களுடைய வேலைவழங்குநர் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறாரென நீங்கள் நினைத்தால், தொழிலாளர் அமைச்சகத்தை அல்லது தொழிற்சங்க உறுப்பினராக நீங்கள் இருந்தால், உங்களுடைய தொழிற்சங்கத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டால், **பணியாளர் ஆலோசகர் அலுவலகத்துடன்** (1-855-659-7744) அல்லது **பணியாளரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சட்ட உதவி நிலையத்துடன்** (1-877-832-6090) நீங்கள் தொடர்புகொள்ளலாம். **நீங்கள் தனித்தில்லை!**

## ››› பாதுகாப்பில்லாத வேலையைச் செய்ய மறுப்பதற்கான உரிமை

பின்வருமாறு **நினைப்பதற்கான காரணம்** உங்களுக்கு இருந்தால் பாதுகாப்பில்லாத வேலையைச் செய்ய மறுப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது:

- நீங்கள் செய்யும் வேலை அல்லது நீங்கள் பயன்படுத்தும் **உபகரணம் அல்லது இயந்திரம்** உங்களை அல்லது உங்களுடன் வேலைசெய்பவரைக் காயப்படுத்தலாம் அல்லது பணியிடச் சூழல் ஆபத்தானது; அல்லது
- **பணியிட வன்முறை** மூலம் உங்களுக்கு ஆபத்து இருந்தாலும் வேலையைச் செய்ய மறுப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது.

### பாதுகாப்பில்லாத வேலையை மறுக்கும் விதம்

**01** பாதுகாப்பில்லாத வேலையை மறுத்த பின்னர்ர் உங்களுடைய வேலைவழங்குநருக்கு அல்லது மேற்பார்வையாளருக்கு உடனடியாக அதை நீங்கள் அறிவிக்க வேண்டும்.

**02** அது பற்றி JHSC பணியாள அங்கத்தவர் ஒருவருடன் அல்லது HSR உடன் புலன்விசாரணை செய்யவேண்டிய சட்டரீதியான தேவை உங்களுடைய வேலைவழங்குநருக்கு இருக்கிறது.

**03** புலன்விசாரணை முடியும் வரை, நீங்கள் வேலைசெய்யும் இடத்தின் அருகே, பாதுகாப்பான ஒரு இடத்தில், நீங்கள் இருக்க வேண்டும்.

**04** அந்த வேலைவழங்குநரின் புலன்விசாரணையின் பின்பும் உங்களுடைய வேலை ஆபத்தானது என நீங்கள் நம்புவதற்கு நியாயமான காரணம் இருந்தால், புலன்விசாரணை செய்வதற்கு தொழிலாளர் அமைச்சின் பரிசோதகர் ஒருவரை உங்களுடைய வேலைவழங்குநர் அழைக்கவேண்டும்.





## ››› வேலைசெய்யும் போது நீங்கள் காயப்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

வேலைசெய்யும் போது நீங்கள் காயப்பட்டால் அல்லது நச்சு இரசாயனப் பொருள்களுக்கு வெளிக்காட்டப்பட்டதால் உங்களுக்கு நோய் ஒன்று உருவானால் பின்வருவனவற்றை நீங்கள் செய்யவேண்டும்:

- **மருத்துவக் கவனிப்பைப் பெறல்** ((முதலுதவி மற்றும்/அல்லது ஆரோக்கியப் பராமரிப்பு).
- முடிந்த விரைவில் **உங்களுடைய வேலைவழங்குநருக்குக் கூறல்.**

LIGHTHOUSE INITIATIVE ››› PREVENTION LINK

PREVENTION LINK DISABILITY PREVENTION AT WORK

cope LOCAL 343

››› preventionlink.ca